" நீதி நிலவுவதாக "

சட்ட மாணவர் சங்கம் - 2008/2009

- சட்டத்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் -

# நீதம் 2009

தழல் - 01

இதழாக்கம்

சட்ட மாணவர் சங்கம்

யாழ் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி

யாழ்ப்பாணம்.

# சட்ட மாணவர் சங்கத்தின் நிறைவேற்றுக் குழு
# 2008/2009

| | | |
|---|---|---|
| பெரும் பொருளாளர் | : | பேராசிரியர் வி.பி.சிவநாதன் |
| தலைவர் | : | திரு.த.வினோதன் |
| உபதலைவர் | : | செல்வி.ஆ.கார்த்திகாதேவி |
| செயலாளர் | : | திரு.வி.மணிவண்ணன் |
| பொருளாளர் | : | திரு.க.சுகாஷ் |
| இதழாசிரியர் | : | திரு.இ.அகிலன் |
| நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் | : | திரு.தி.அருச்சுனா |
| | | செல்வி.இ.ரூபினி |
| | | செல்வி.பா.பிரதீபா |
| | | திரு.மா.சிறில்ராஜ் |
| | | திரு.வி.பிரசாந்த் |

# இலங்கையின் 2005ம் ஆண்டின் 34ம் இலக்க குடும்ப வன்முறைச் செயற்தடுப்புச்சட்டத்தின் பொருத்தப்பாடு

கோசலை மனோகரன்

அமைதி, ஒழுங்கைப் பாதுகாப்பதற்கான கடப்பாடு என்பது சட்டங்களின் மீதான பாரிய கடப்பாடொன்றாகும். இந்நோக்கத்தை எய்தும் வகையில் வன்முறைகள் அற்ற சமூகமொன்றை உருவாக்கச் சட்டங்கள் ஆவன செய்தல் வேண்டும். வன்முறைகள், அவை சமூகத்தின் எந்த மட்டத்தில் எழுவதாயிருப்பினும் அவற்றின் எதிர்மறை விளைவுகளிலிருந்து சமூகத்தைப் பாதுகாத்தலிற்கான பொறுப்பு சட்டங்களிற்கு இருக்கிறது. வன்முறைகளை வேரோடு களைவதிலும், முளைவிட்டவற்றை இடைக்களைதலிலும் சட்டங்கள் எதிர்நோக்கக்கூடிய பாரிய சவால்கள் தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் இன்று நன்கு உணரக்கப்பட்டிருக்கின்றன.

குடும்ப மட்டங்களில் நிலவுகின்ற புரிந்துணர்வுக்குறைவு அல்லது மந்தகதியிலான புரிந்துணர்வு ஆகியவற்றின் விளைவால் குடும்பங்களிலிருந்து தோன்றுகின்ற பிரச்சினைகள் வன்முறையின் ஆகக்குறைந்த படிநிலையில் இருப்பதை அவதானிக்கலாம். குடும்ப வன்முறைகளானவை அவற்றின் அடிநிலையிலிருந்து வன்முறைப்பட்டியலின் அதியுச்சங்களைத் தொடுதல் நடைபெறக்கூடாதாயின் குடும்பமட்டங்களிலான வன்முறைகளைத் தடுக்கவும், பாதுகாக்கவும் சட்டத்தால் ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

அங்ஙனம் ஆக்கப்பட்ட சட்டம்தான் 2005ம் ஆண்டின் 34ம் இலக்க குடும்ப வன்முறைச் செயல் தடுப்புச் சட்டம். சட்டத்தால் வரையறை செய்யப்பட்டபடி வீட்டுக்குள்ளே அல்லது வெளியே தனிப்பட்ட முறையில் புரியப்பட்ட தவறான செயல் அல்லது உணர்த்தி ரீதியான துஷ்பிரயோகத்திற்காக ஒருவர் பாதுகாப்புக் கட்டளைக்காக நீதிவான் நீதிமன்றத்திற்கு விண்ணப்பமொன்றைச் செய்வதற்கான உரிமை சட்டத்தின் 2ம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ளது. விண்ணப்பம் செய்யத் தகைமையுடையோர் பட்டியல் 2ம் பிரிவின் 2ம் உட்பிரிவில் தரப்பட்டுள்ளது.

தகவுடைய ஒருவரால் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்று கிடைத்ததன் மேல் குடும்ப வன்முறைச்செயல் புரியப்படுவதைத் தடுப்பதற்கான அவசரத்தேவை மற்றும் துன்புற்ற ஆளின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான அவசியம் என்பவற்றைக் கருத்திற் கொண்டு

(4(2) ) உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடைக்காலக் கட்டளையொன்றை (4(1) ) வழங்குவதற்கு நீதிவான் தத்துவமளிக்கப்பட்டுள்ளார்.

இங்ஙனம் ஆக்கப்பட்ட இடைக்காலக் கட்டளையானது குடும்ப வன்முறைச் செயல் எதையும் புரிவதிலிருந்து பிரதிவாதியைத்தடைசெய்வதாய் அமையும் நிபந்தனைகளைக் கொண்டதாய் அமைவதோடு குறித்த விடயம் தொடர்பில் பாதுகாப்புக் கட்டளையொன்று அறுதியாக வழங்கப்படும் வரை அமுலில் இருக்கும் (5(3)).

அதன்பின் பிரதிவாதி ஏதேனும் குடும்பவன்முறைச் செயல் புரிவதைத் தடைசெய்யும் வகையிலும், துன்புற்ற ஆளின் பாதுகாப்பையும் நலனையும் உறுதிப்படுத்தல் அவசியமாயுள்ள சூழ்நிலையிலும் நீதிமன்றத்தால் 12 மாதங்களை விஞ்சாத காலப்பகுதிக்கு அமுலில் இருக்கக் கூடிய வகையிலும் பாதுகாப்புக் கட்டளை ஒன்றை நீதிமன்றம் ஆக்கமுடியும் (பிரிவு 10)

இவ் இடைக்காலக் கட்டளையாயினும் சரி, பாதுகாப்புக் கட்டளையாயினும் சரி சம்பந்தப்பட்டவர்கள் சேர்ந்து வாழும் இடம், துன்புற்ற ஆளின் வதிவிடம் தொழில், பாடசாலை அல்லது துன்புற்ற ஆள் தொடர்புடைய இடம் மற்றும் ஆதனம் ஆகியவற்றில் பிரதிவாதி நுழைவதையும், துன்புற்ற ஆளைத் தொந்தரவு செய்வதையும் தடைசெய்யப்படுவதோடு (பிரிவு 11) அவசியமான பொழுதுகளில் துன்புற்ற ஆளின் பாதுகாப்பு, நலன் கருதி பொருத்தமான குறை நிரப்புக்கட்டளைகளை ஆக்குவதற்கும் நீதிமன்றம் சக்தி பெற்றுள்ளது.

குடும்பங்களிலெழக்கூடிய வன்முறைகளினால் மனிதாபிமானமற்ற ஒடுக்கல்களை எவரும் அனுபவிப்பதை அனுமதிக்கக் கூடாது என்பதற்காக அத்தகைய பாதிப்புக்களிலிருந்து துன்புற்ற ஆளை விடுவித்து நிவாரணம் அளிக்கவென சட்டத்தால் செய்யப்பட்டுள்ள இவ்வேற்பாடுகள் வரவேற்கத்தக்கதேயாயினும் இந்தச் சட்டம் செயற்படப் போகின்ற இயங்குதளம் சார்ந்து சில சட்டப்பிரச்சனைகள் சட்டவாளர்களால் முன்வைக்கப்படுகின்றது.

உலகில் ஒவ்வொரு நாட்டினதும் அடிப்படைக் கட்டமைப்பானது ஒரே மாதிரியாக இருக்கும் என்ற நினைப்பு சாத்தியமில்லாக் கற்பனையே. அந்தந்த நாட்டின் கலை, கலாசார , பொருளாதார, பண்பாடு மற்றும் இன்னோரன்ன விழுமியங்களுக்கமைவாகவே அதன் கட்டமைப்பு அமைக்கப்பட்டிருக்கும். அந்தந்த நாட்டின் இயல்புகளுக்கும், தேவைகளுக்கும் அமையவே அரசின் பணிகளும் வகுக்கப்பட்டடிருக்கும். இந்தவகையில் மேலைத்தேய நாடுகளின் அரசியல் அமைப்பிலும் கட்டுமானத்திலிருந்தும் கீழைத்தேய நாடுகள் கணிசமான கட்டமைப்பு வேறுபாட்டைக் கொண்டிருக்கின்றன.

நாடுகளின் அரசியல் கட்டமைப்புக்கும் குடும்பவன்முறைத் தடுப்புச்சட்டத்திற்கும் என்ன சம்பந்தம் என்ற கேள்வி எழுகின்றது. வேறேதேனும் ஒரு வன்முறையைத் தடுப்பதற்கென ஆக்கப்பட்ட சட்டமொன்றின் விடயத்தில் நாட்டின் கட்டமைப்பபைப் பின்னணியில் வைத்து ஆராய வேண்டிய தேவை பெருமளவில் எழாது. ஆனால் குடும்ப வன்முறைத் தடுப்புச்சட்டத்தைப் புறந்தள்ளி விட்டு கண்மூடித்தனமாக அச்சட்டத்தை அமுல்ப்படுத்த முயல்தலினால் பல பாரதூரமான சமூகப்பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிடும்.

குடும்பம் என்பதற்கு நாடுகள் வழங்கியுள்ள அங்கீகாரம் எத்தகையது என்பது அடுத்து ஆராயவேண்டிய பிரச்சினை. சமூகத்தின் அடிப்படை அலகாக குடும்பம் பொதுவில் ஏற்றுக்கொள்ளப்படினும் ஒரு குடும்பத்தை பாதுகாத்தல் என்ற புள்ளியில் அரசின் கடப்பாடுகள் அவ்வவ் நாட்டின் இயல்புகளைப் பொறுத்து வேறுபடுகின்றது.

இலங்கையைப் பொறுத்த வரையில் சமூக அலகென்ற அடிப்படையில் குடும்பங்களைப் பாதுகாப்பதற்கான கடப்பாடானது 1978ம் ஆண்டு அரசியலமைப்பின் அரசகொள்கையின் வழிகாட்டிக் கோட்பாடுகள் உறுப்புரை 27 (12)ன் கண் அரசின் மீது சுமத்தப்பட்டுள்ளது. எனவே குடும்பங்கள், சிதைவடையாமல் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு இலங்கை அரசிற்கான வழிப்படுத்தலாக உள்ளது. வழிகாட்டிக் கொள்கையானது சட்டக்கடப்பாடல்ல என்பது குறிப்பிடத்தக்கது.

குடும்ப வன்முறைத் தடுப்புச்சட்டத்தின் மூலமாக குடும்பங்களில் எழக்கூடிய வன்முறைகளைத் தடுக்கும் கருத்தியல் நோக்கில் குடும்பங்கள் சீர்குலைக்கப்படுகின்றன என்ற குற்றச்சாட்டு தற்போது மேலெழுந்து வருகின்றது.

குடும்பப் பிரச்சினைகள் சந்திக்கு வருகின்றபொழுது குடும்பத்தின் அத்திவாரம் ஆட்டம் கண்டுவிட்டதாய் அர்த்தம் கொள்ளப்படுகின்றது. கீழைத்தேய கலாசாரத்தை மிக இறுக்கமாக ஏற்றுக்கொண்ட இலங்கை மக்களின் பார்வையில் குடும்பப் பிரச்சினைகளிற்கென நீதிமன்றின் படிகளில் ஏறுதல் என்பதும் தங்கள் உறவுகளிற்கெதிராகச் சட்டத்தின் செயற்பாட்டை தூண்டிவிடுதல் என்பதுவும் அருவருக்கத்தக்க செயலென எடைபோடப்படுவதோடு சமூக அலகு ஒன்று என்ற அடிப்படையில் அக்குடும்பத்தில் வழங்கப்பட்டு வந்த கௌரவமும் இழக்கப்படுகிறது.

ஆனாலும்கூட விவாகரத்துக் கோரி மாவட்டநீதிமன்றங்களிற்கு வருகின்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கையைப் பார்க்கிற பொழுதும், வாழ்க்கைத் துணைக்கு

எதிராக, மற்றைய துணை துணிந்து சாட்சிக்கூண்டில் ஏறுகின்ற நிகழ்வைப் பார்க்கின்ற பொழுதும் குடும்பப் பிணக்குகள் அம்பலப்படுத்தப்படல் கேவலம் என்பதாக எங்கள் மக்களின் மனங்களிலிருந்து அடிப்படைச் சிந்தனை பாரிய ஆட்டம் கண்டிருப்பதை உணர முடிகிறது.

வன்முறைகள் குடும்பங்களுக்குள் வரையறையற்று ஊடுருவியுள்ள இன்றைய காலத்தில் அவை வெளியுலகப் பார்வையிலிருந்து மறைக்கப்படல் என்பது படுமுட்டாள்த்தனமான சிந்தனையாகவே இருக்கும். குடும்பவன்முறைகள் அம்பலப்படுத்தப்பட்டு உரியவர் தண்டிக்கப்படுவதும் பாதிக்கப்பட்டவர் நிரந்தரத் தீர்வு பெறுவதும் அவசியம் செய்யப்பட வேண்டிய செயலாகும்.

ஆனால் குடும்ப வன்முறைச் செயல் தடுப்புச் சட்டமானது தவறிழைத்தவரை தண்டிப்பதில் செவ்வனே செயற்பட்டு வருகின்றதாயினும் துன்புற்ற ஆளிற்கு நிரந்தரத் தீர்வு வழங்கல் விடயத்தில் சில விடயங்களைக் கவனிக்கத் தவறி இருக்கிறது என்று தான் கூற வேண்டும்.

உதாரணமாக கணவனின் துன்புறுத்தல்களால் பாதிக்கப்பட்ட பெண்ணொருவருக்கு பாதுகாப்புக் கட்டளை மூலம் கணவனின் தொந்தரவிலிருந்தும், நச்சரிப்பிலிருந்தும் வேறுபல வழிகளில் ஏற்படக்கூடிய இடர்பாடுகளில் இருந்தும் இச்சட்டம் விடுதலை அளிக்கவல்லதாய் உள்ளது. ஆனால் கணவனின் தொடர்பறுக்கப்பட்ட பெண் சுயமாக தன்னைப் பராமரிக்கும் இயலுமையைக் கொண்டிராதவிடத்து அவளின் எஞ்சிய வாழ்காலத்திற்கு யாது வழி என்ற விடயத்தில் இச்சட்டம் பதிலற்றுக்கிடக்கிறது.

மேலைத்தேய நாடுகளில் இங்ஙனம் கட்டறுக்கப்பட்ட குடும்ப அங்கத்தவர்களின் நலன் கருதி சமூகம் பாதுகாப்பு (Social security) எனும் விசேட திட்டம் உள்ளது. இதன்படி முறிந்த குடும்பங்களிலுள்ள தேவைமிகுந்த அங்கத்தவர்களுக்கு அரசு உதவிப்பணம் வழங்குவதோடு வாழ்வதற்கான நம்பிக்கையையும் உத்தரவாதத்தையும் தருகிறது.

இலங்கையைப் பொறுத்த வரை சமூகநல அரசு என்ற தன்மையை பொருளாதார நெருக்கடி வளப்பற்றாக்குறை என்பதன் பிரதான காரணங்கள் எனவே இத்தகைய முறிந்த குடும்பங்கள் தொடர்பில் அவற்றின் பாதுகாப்பிற்கென அரசால் நிதியுதவி முதலில் காத்திரமான பங்களிப்பைச் செய்ய முடியாது என்பது நிதர்சனம். பொருளாதார நெருக்கடி, வளப்பற்றாக்குறை என்ற மன்னிப்புக்களை முன்னிறுத்தித்தான் பெருளாதார, சமூக,

கலாசார உரிமைகள் எமது அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்படாமல் இழுத்தடிக்கப்படுகிறது. அத்தியாயம் 3ல் அடிப்படை குடியியல் அரசியல் உரிமைகள் மாத்திரமே உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளன.

பிணக்குகள் எழுந்த குடும்பங்கள் மீள் இணைக்கப்படும் வரையில் அல்லது மீள் இணைதலிற்கான சந்தப்பங்கள் இல்லாது போகும் தறுவாயில் அவர்களின் வாழ்காலத்திற்கென சமூகப்பாதுகாப்பு முதலில் எத்தகைய உத்தரவாதத்தையும் வழங்க முடியாத நாட்டின் சட்டத்தால் பிணக்குகளை முறைப்பாடு செய்தலிற்கும், தவறிழைத்தவரை தண்டனைக்குள்ளாக்குவதற்கும் ஏற்பாடுகள் இருப்பினும் அவற்றால் யாதொரு பயனும் விளையப்போவதில்லை.

குடும்பவன்முறை செயல் தடுப்புச்சட்டத்தைப் பொறுத்தவரை குடும்பவனமுறையை முறைப்பாடு செய்வதற்கும், துன்புற்ற ஆளை தொடர் துன்புறுத்தலிலிருந்து விடுவிப்பதற்கும் தான் வழிசெய்யப்பட்டிருக்கிறது. சட்டத்தின் 12(1)(ஊ)ன்' கீழ் எவரேனுமாளுக்கு ஆதாரமளிப்பதற்கு பிரதிவாதிக்கு கடமையொன்றுள்ளவிடத்து அத்தகைய ஆளுக்கு அவசர பண உதவி வழங்குமாறு பிரதிவாதி கட்டளையிடப்படலாம் எனக் கூறப்படினும் பணத்தொகையின் அளவு எத்தகைய காலத்திற்கு முதலில் கேள்விகளிற்கு தெளிவான பதிலில்லை.

குடும்பவன்முறைச் செயல் தடுப்புச் சட்டத்தின் கீழ் கணவனின் கொடுமைக்கெதிராக முறைப்பாடு செய்த குடும்பப் பெண்ணொருவர் கணவனின் தலையீடு இன்றி சட்டத்தால் பிரித்து வைக்கப்படும் குறிப்பிட்டளவு காலப்பகுதியில் (உதாரணமாக பாதுகாப்புக் கட்டளை அமுலில் உள்ள காலம்) அப்பெண் மற்றும் குழந்தைகள் முதலிய தங்கிவாழ்வோரின் அடிப்படைத் தேவைகளிற்கான வழி என்ன என்பதற்கு இச்சட்டத்தில் தெளிவான பதிலில்லை. பிரிவு 11(1)ன் கீழ் திருமணவீட்டைப் பரிமாற்றத்துக்குட்படுத்தல் மட்டும் தவிர்க்கப்பட்டுள்ளது. வாழ்க்கைத் துணையொருவரை மற்றைய வாழ்க்கைத் துணைக்கெதிரான தகுதி வாய்ந்த சாட்சியாக ஏற்றுக்கொண்ட இச்சட்டம் (பரிவு 16) இச்செயலால் விளையக் கூடிய பிரிவு மற்றும் அது சார்ந்த விளைவுகள் பற்றிச் சிந்திக் கத் தவறிவிட்டதெனலாம்.

குடும்ப வன்முறையொன்றிற்கென முறையீடு செய்த நபரையும் எதிராளியையும் மீள் இணைப்பதில் சட்டம் எவ்வளவு பங்களிப்பை நல்கப் போகின்றது என்பதும் கேள்விக்குறியே. இச்சட்டத்தின் பிரிவு 5(2)(அ)ன் கீழ் திறத்தவர்க்கு ஆலோசனையளித்தல்

அவசியமாகவுள்ளவிடத்து அவ்வண்ணம் செய்யும்படி சமூகசேவகர் ஒருவருக்கு அல்லது குடும்ப ஆலோசகரொருவருக்கு நீதிமன்றம் கட்டளையிட முடியும் எனக் கூறப்பட்டுள்ள போதும் அவ்வாலோசனை எத்தகையது என்பது பற்றி தெளிவாக கூறப்படாமை குறைபாடொன்றே.

குடும்ப வன்முறை காரணமாக தொடர்பறுக்கப்பட்ட குடும்பங்கள் ஒரு கட்டத்தில் மீள் இணையும் போது பாதிக்கப்பட்டவரின் வாழ்வாதாரம் என்ற கேள்வி ஒரு வழியாய் முடிவுக்கு வருகிறது மீள் இணைவிற்கான சாத்தியக் கூறுகள் தென்படாத குடும்பங்களைப் பொறுத்தளவில் வழக்கு தாக்கல் செய்யப்படின் வழக்கு முடிவில் பராமரிப்புத் தொகைகள் கட்டளை வழங்கப்படும் வரைக்கும் வாழ்வதற்கு என்ன வழி என்ற நச்சரிப்பு தொடர்ந்தபடி இருக்கும் விவாகரத்து வழக்கு தொடர்வதிலும், அதற்கான காரணங்களைச் சரியாக முன்வைப்பதிலும் இறுதியாக சாதகமான தீர்ப்பை நீதிமன்றத்தில் பெறுவதிலும் பல சட்டத்தடைகள் இங்கு மனங்கொள்ளத்தக்கது.

எதிர்கால விளைவுகள் அனைத்தையும் உள்வாங்கி அவற்றைத் தவிர்ப்பதற்காக சூழ்நிலைகளை முற்கூட்டியே ஏற்பாடு செய்தல் என்ற விடயம் சட்டவாக்குனர்களைப் பொறுத்தளவில் பெரிய சவாலாக இருப்பதோடு நடைமுறையில் அசாத்தியமானதும் கூட. இலங்கை போன்ற நாடுகள் சட்டங்களால் சிபாரிசு செய்யப்படும் அத்தகைய தீர்வுகளை வழங்குவதற்கான இயலுமையிலும் இல்லை.

குடும்பவன்முறை செயல் தடுப்புச் சட்டத்தின் கீழ் சமூகப் பாதுகாப்புக்கிற்கு ஏற்பாடு செய்யப்பட்டது என்ற எடுகோளின் பேரில் ஆராய்ந்து பார்த்தாலும் எத்தகைய சமூகப்பாதுகாப்பை வழங்கக் கூடிய பொருளாதார இயலுமையை இலங்கை அரசுக்கு உண்டா என்பது சந்தேகமே.

எனவே ஒரு பக்கம் பிரச்சினைகளோடு போட்டி போட்டு சட்டங்கள் தீர்விற்காக வழியில் வளர வேண்டும் என்பதோடு மறுபுறம் அரசுகள் சட்டத்தின் சிபார்சுகளை நிறைவேற்றும் இயலுமையை துரிதமாக ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதுதான் இன்றைய தேவையாயுள்ளது.

**கோசலை மனோகரன்**
**உதவி விரிவுரையாளர்**
**சட்டத்துறை**
**யாழ் பல்கலைக்கழகம்**